**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | ) | |
| Miscellaneous | .. | .. | ) | **Sessions Case No. 52/2023** |
| Preliminary Register | .. | .. | ) | |
| Sessions | .. | .. | ) | |

| | |
|---|---|
| Deposition of witness for PW. | { **Prosecution PW4** |
| | { Defence |
| | { Court |

| | | |
|---|---|---|
| Name | : | தமிழ்செல்வம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர் இல்லை, 317 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **02nd day of December 2025.**

முதல் விசாரணை **:** நான் சாத்தூர் தாலுகா நென்மேனியில் குடியிருந்து வருகிறேன். பஞ்சாயத்து தண்ணீர் திறந்துவிடும் ஆப்ரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். பஞ்சாயத்து தலைவி வேலம்மாளை தெரியும். எதிரி

பெரியசாமியை தெரியும். கடந்த 2022ம் வருடம் ஒருநாள் இரவு சுமார் 9 மணிக்கு நான் தண்ணீர் திறந்துவிட்டு வரும்போது, வேலம்மாள் வீட்டருகே எதிரி பெரியசாமி சத்தம்போட்டு கொண்டிருந்தார். நாங்கள் சத்தம் போடதீங்கள் என்று பெரியசாமியை சத்தம் போட்டோம். அப்போது அங்கு வந்த குருசாமி, பெரியசாமியை சத்தம் போட்டார். பெரியசாமி அருகிலிருந்த பைப்பை எடுத்து குருசாமியின் தலையில் அடித்துவிட்டார். குருசாமிக்கு தலையில் இரத்தம் வந்தது. வேலம்மாள் வீட்டினுடைய கேட்டை அவர் கொண்டுவந்த இரும்புகம்பியை வைத்து அடித்தார். பின்னர் காயம்பட்ட குருசாமியை இன்னொருவருடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நீங்கள் வாதி வேலம்மாளின் கீழ் பணிபுரிபவர் என்றால் - சரிதான். நீங்கள் தண்ணீர் திறந்துவிட்ட நேரம் இருட்டான நேரம் என்றால் - சரிதான். வேலம்மாள் வீட்டின் முன்பு நிறைய பேர் கூடியிருந்தார்கள் என்றால் - சரிதான். யார் குருசாமியை அடித்தார்கள் என்று உங்களால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் - சரிதான். நீங்கள் வேலம்மாளின் கீழ் வேலை செய்வதால் பொய்சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் - சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**